**2026.07.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. இலங்கையில் நிகழ்நிலை சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலை சொத்துக்கள் சேவை வழங்குநர்களை ஒழுங்குமுறைப்படுத்தல்**

தற்போது இலங்கையின் பயனர்களுக்கு கரைகடந்த பரிவர்த்தனைகள் மற்றும் தனிநபர்களுக்கிடையே நேரடியாக இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் முறைசாரா இணையவழித் தளங்கள் மூலம் நிகழ்நிலை சொத்துக்கள் (Virtual Assets) அதாவது, 'கிறிப்ரோ' பயன்பாட்டு நாணயம் போன்ற டிஜிட்டல் முறையில் வர்த்தகங்களை மேற்கொள்ளக் கூடிய அல்லது நாணயமாற்றல் செய்யக்கூடிய கொடுப்பனவுகள் அல்லது முதலீட்டு நோக்கங்களுக்கு பயன்படுத்தக்கூடிய பெறுமதியுடன் கூடிய டிஜிட்டல் வடிவங்களுக்கு அணுகக்கூடிய இயலுமை உண்டு. குறித்த தளங்கள் முழுமையாக உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சட்டகத்திற்கு வெளியே இயங்குகின்றமையால், நிகழ்நிலை சொத்துக்கள் சேவை வழங்குநர்கள் (Virtual Assets Service Providers) அடிப்படை இணக்கக் கடப்பாடுகள், அறிக்கையிடல் தரநியமங்கள் அல்லத கண்காணிப்புக்கான பதிவுத் தேவைகள் இல்லாமல் இயங்குகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், இலங்கையில் நிதி முறைமையில் நிதி தொடர்பான குற்றங்கள் இடம்பெறுவதற்கான ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு, நிகழ்நிலைச் சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலைச் சொத்துக்கள் சேவை வழங்குநர்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் பணிச்சட்டகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், பணத் தூய்தாக்கலைத் தடுத்தல் மற்றும் பங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் கொள்கை வழிகாட்டலின் கீழ், நிகழ்நிலைச் சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலைச் சொத்துக்கள் சேவை வழங்குநர்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் பணிச்சட்டகம் மற்றும் அமுல்படுத்தல் திட்டமொன்றை அடையாளங் காண்பதற்காக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் அவர்களின் தலைமையில் மற்றும் ஏனைய ஏற்புடைய அதிகாரிகளுடன் கூடிய நிகழ்நிலைச் சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலைச் சொத்துக்கள் சேவை வழங்குநர்கள் தொடர்பான உபகுழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி, நிதிப் புலனாய்வுப் பிரிவு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் இணைந்து ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட கண்காணிப்புக் கட்டமைப்பொன்றில், நிகழ்நிலைச் சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலைச் சொத்துக்கள் சேவை வழங்குநர்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரியாக இலங்கை பிணைமுறிகள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவை பெயர்குறித்து நியமிப்பதற்கு குறித்த உபகுழு முன்மொழிந்துள்ளது. அதற்கமைய, குறித்த உபகுழுவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் நிகழ்நிலைச் சொத்துக்கள் மற்றும் நிகழ்நிலைச் சொத்துக்கள் சேவை வழங்குநர்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு தொடர்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு டிஜிட்டல் பொருளாதார அமைசடசராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கையில் பல்நிலை போக்குவரத்து நிலையங்களை முகாமைத்துவம் செய்தல்**

இலங்கையின் நகரங்கள் மற்றும் நகரங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்துக் கட்டமைப்பை மேலும் வினைத்திறனான, ஒருங்கிணைந்த மற்றும் பயனர்களுக்கு நேயம்மிக்க முறைமையாக மாற்றுதல் அரசின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. அதற்கு பேரூந்துகள், புகையிரதம், வாடகை ஊர்திகள் மற்றும் ஏனைய போக்குவரத்து முறைகளுக்கிடையில் வினைத்திறனான பரிமாற்றங்கள், அவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு ஒரு தீர்வாக பல்நிலை போக்குவரத்து



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

நிலையங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளது. மாகும்புர மற்றும் கடவத்த போன்ற பல்நிலை போக்குவரத்து நிலையங்கள் தற்போது இயங்கி வருவதுடன், அநுராதபுரம் (தெற்கு) மற்றும் கண்டி போன்ற பல்நிலை போக்குவரத்து நிலையங்கள் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த பல்நிலை போக்குவரத்து நிலையங்களின் தொழிற்பாடு, நிர்வாகம், தரநிர்ணயப்படுத்தல், வியாபார அபிவிருத்தி மற்றும் தேசிய மட்டத்தில் கொள்கை ரீதியான ஒருங்கிணைப்புக்கு போக்குவரத்து விடயதான அமைச்சின் கீழ் நிரந்தர நிறுவனக் கட்டமைப்பொன்றை நிறுவ வேண்டிய தேவை தொடர்பாக 2025.12.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதற்கமைய, எட்டப்பட்ட தீர்மானத்திற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஏற்புடைய திணைக்கள அதிகாரிகளால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், பல்நிலை போக்குவரத்து நிலையங்களின் முகாமைத்துவத்திற்காக 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, போக்குவரத்து விடயதான அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் 100% வீதம் திறைசேரிக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட (பொது) கம்பனியை நிறுவுவது பொருத்தமானதென விதந்துரைக்கப்பட்டுள்ளது. குறித்த விதப்புரைகழள அமுல்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி பதில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவாக இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவகத்தை மீள்கட்டமைத்தல்**

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் தொழிற்றுறைக்குரிய ஆய்வுகள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு 1995 ஆம் ஆண்டில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளது. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் தொழிற்றுறையின் அபிவிருத்திக்கு இணையான சேவைகள் இவ்விரண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயினும், ஒருங்கிணைந்த பொறிமுறையொன்று இன்மையால் குறித்த நிறுவனங்கள் இயங்கும் போது வளங்கள் விரயமாகின்றமையும் மற்றும் கொள்கை ரீதியான வேறுபாடுகள் தோன்றுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதுதொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டு பிரதமர் அவர்களின் தலைமையில் அரசுக்குச் சொந்தமான வணிக ரீதியற்ற நிறுவனங்களை மீளாய்வு செய்வதற்கு அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், இவ்விரண்டு நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்கு 2025.03.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரத்திற்கமைய ஏற்புடைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ் அதிகாரிகள் குழுவின் அறிக்கையின் பிரகாரம், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவாகத் தாபிப்பதற்கும், அதற்கு 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சட்ட ரீதியான படிமுறைகளை மேற்கொள்வதற்கும் கைதொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பிராந்திய கைத்தொழில்பேட்டைகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்குதல்**

பிராந்திய மட்டத்தில் கைத்தொழில் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சால் பிராந்திய கைத்தொழில்பேட்டைகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கைத்தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்காக அடையாளங் காணப்பட்ட காணிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து, பின்னர் பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு கைத்தொழில் பேட்டைகளில் காணித்துண்டுகள் ஒதுக்கி வழங்கப்பட்டு வருகின்றது. பிராந்திய கைத்தொழில் பேட்டைகளில் முதலீட்டுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்டுள்ள பிராந்தி கைத்தொழில் சேவைகள் குழு மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு 23 கருத்திட்டங்களுக்கு காணிகளை ஒதுக்கி வழங்குவதற்கு விதந்துரைத்துள்ளது. இக்கருத்திட்டங்கள் மூலம் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள முதலீடுகளின் பெறுமதி 2,805.26 மில்லியன் ரூபாய்களாகும். மேலும் குறித்த கைத்தொழில் கருத்திட்டங்கள் மூலம் 870 நேரடி வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு குறித்த 23 முதலீட்டாளர்களுக்கு 13 பிராந்திய கைத்தொழில் பேட்டைகளில் காணித் துண்டுகளை 35 ஆண்டுகால குத்தகைக்கு வழங்குவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. முதலாவது பட்டப்படிப்பை தரப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்வதற்கான அரச புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை திருத்தம் செய்தல்**

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் திறமைச் சித்திகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு சர்வதேச தரப்படுத்தலுடன் கூடிய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமது முதலாவது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காக அரச புலமைப்பரிசில் வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்கீழ் ஒரு மாணவருக்கு ஓராண்டுக்கு உயர்ந்தபட்சம் 20 மில்லியன் ரூபாய்கள் வீதம், பட்டப்படிப்பின் முழுமையான நான்கு ஆண்டுகளுக்கும் உயர்ந்தபட்சம் 80 மில்லியன் நிதி அரசால் வழங்கப்படும். அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் முப்பது மாணவர்கள் இப்புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அவர்களில் ஒன்பது மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். எஞ்சிய மாணவர்கள் வெளிநாட்டுக் கல்விக்கு அனுப்புவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதான வெளிநாட்டு நாணய அலகுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது இலங்கை ரூபாய் எதிர்பாராத வகையில் பணப்பெறுமதி குறைவடைந்தமையால் மாணவர்கள் வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த வேண்டிய ஒருசில கொடுப்பனவுகளுக்கு தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை போதியளவாக இல்லாமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், செலாவணி விகிதம் உறுதிப்பாட்டை எட்டும் வரைக்கும் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவருக்கு ஓராண்டுக்கு 2.5 மில்லியன் ரூபாய்கள் வரை செலாவணி விகிதத்திற்கு சீராக்கல் கொடுப்பனவை வழங்குவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையுடன் தொடர்புபடும் கட்டமைப்பு இடைமாறு வீதியை உள்ளடக்கி றுவன்புர அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டத்தின் கட்டம் - I இனை அமுல்படுத்தல்**

கஹதுடுவவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு இடைமாறு வீதி உள்ளிட்ட றுவன்புர அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிப்புக் கருத்திட்டத்தின் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரைக்கும் கட்டம் - I வீதியின் பகுதியை நிர்மாணிப்பதற்கான பெறுகைச் செயன்முறையை 2026 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்து குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டில் உள்நாட்டு நிதியில் 15 பில்லியன் ரூபாய் மதிப்பீட்டுச் செலவின் கீழ் குறித்த பெறுகைச் செயன்முறையை அமுல்படுத்தி தகைமையுடைய ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. சயுரபுர, சஹஸ்புர, சிங்கபுர கட்டம் - I மற்றும் சிங்கபுர கட்டம் II வீட்டுத் தொகுதிகளை புனரமைத்தல்**

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நகர்ப்புறங்களில் குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற குடியிருப்புக்களில் வாழ்கின்ற சமூகத்தவர்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள அங்குலான சயுரபுர, பொரல்ல சஹஸ்புர, சிங்கபுர கட்டம் - I மற்றும் சிங்கபுர கட்டம் II வீட்டுத் தொகுதிகளில் வாழ்கின்ற குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் கட்டிடங்களின் உறுதிப்பாட்டை அதிகரித்தல் போன்ற அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கு 764.09 மில்லியன் ரூபாய்கள் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, திறைசேரி நிதியைப் பயன்படுத்தி 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் குறித்த புனரமைப்புப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலங்கை போக்குவரத்துச் சபையில் காணப்படுகின்ற உருக்குலைந்த உலோகத் துண்டுகளை அகற்றுதல்**

இலங்கை போக்குவரத்துச் சபையில் திரண்டுள்ள உருக்குலைந்த உலோகத் துண்டுகளை அகற்றுவதற்காக 2024.10.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய போட்டி பெறுகையை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்கு 09 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் பிரகாரம், கணிசமானளவு பதிலளிப்புக்களுடன் கூடிய உயர்ந்பட்ச விலைமனுதாரர்களுக்கு கீழ்க்காணும் வகையில் குறித்த உருக்குலைந்த உலோகங்களை கையுதிர்ப்பதற்கான பெறுகையை வழங்குவதற்கு பதில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| விலைமனுதாரர் | பெறுகைப் பெறுமதி (ரூபாய்) |
|---|---:|
| M/s Udaya Industries | 16,536,695.00 |
| M/s Ashok Steel Industries (Pvt) Ltd | 89,424,153.88 |

| | |
|---|---|
| M/s Kalana Tech Engineering | 1,691,210.00 |
| M/s S.R. Steel (Pvt) Ltd | 47,578,448.00 |
| M/s Ceylon Steel (Pvt) Ltd | 1,225,500.00 |
| M/s IWW Steel industries (Pvt) Ltd | 39,434,186.40 |
| **மொத்தப் பெறுகை பெறுமதி** | **195,890,193.28** |

09. **1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NIBM), 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பாடவிதானங்களின் கீழ் சான்றிதழ், டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கமைய பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர், 2013 ஆம் ஆண்டில் பட்டம் வழங்கும் அதிகாரம், அதன் 100% வீத பங்குரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள தேசிய வியாபார முகாமைத்துவக் கல்லூரி (NSBM) இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயினும், தற்போது தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகமாக நடாத்திச் செல்லப்படுகின்றமையால், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திற்கு அல்லது அதன் இணை நிறுவகத்திற்குள்ள பட்டம் வழங்கும் அதிகாரம் இழக்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவகத்திற்கு பட்டம் வழங்கும் அதிகாரம் கிடைக்கும் வகையில், 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமித்தல்**

இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான திரு. எம்.ஜே.எஸ்.ரவீசிங்க அவர்கள் பதில் கடமையாக பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்காக 2025.12.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் அவரை 2026.01.01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளார். அதற்கமைய, திரு. எம்.ஜே.எஸ்.ரவீசிங்க அவர்களை பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளராக நிரந்தரப் பதவியில் நியமிப்பதற்கு கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

11. **சமூக சேவைகள் திணைக்களம், தேசிய முதியோர் செயலகம் மற்றும் இயலாமைக்குட்பட்டவர்களுக்கான தேசிய செயலகம் போன்றவற்றை ஒருங்கு சேர்த்தல்**

சமூக சேவைகள் திணைக்களம், தேசிய முதியோர் செயலகம் மற்றும் இயலாமைக்குட்பட்டவர்களுக்கான தேசிய செயலகம் ஆகிய மூன்று நிறுவனங்களால் இலங்கையில் ஓரங்கட்டப்பட்ட நபர்கள்/குழுக்களுக்கான நலனோம்புகை மற்றும் சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நியமனம் பெறுகின்ற சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கு தேசிய முதியோர் செயலகம் மற்றும் இயலாமைக்குட்பட்டவர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பொறுப்புக்களும் களநிலையில்

ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதனால், குறித்த நிறுவனங்களின் சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஒருமித்த நிர்வாகக் கட்டமைப்பில் இச்சேவைகளை அமுல்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இயலாமைக்குட்பட்டவர்களுக்கான தேசிய செயலகம் ஆகியவற்றை நிர்வாக ரீதியாக ஒருங்கு சேர்ப்பதற்கு கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. **நீதிமன்றங்களின் செயன்முறையை வினைத்திறனாகவும் மற்றும் முறைசார்ந்த வகையிலும் மேற்கொள்வதற்காக அரசியலமைப்பு மற்றும் நீதித்துறைச் சட்டக் கோவையைத் திருத்தம் செய்தல்**

அரசியலமைப்பில் 146 ஆம் உறுப்புரைக்கமைய, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்குத் தேவையான மேன்முறையீட்டு நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. குற்றங்கள் தொடர்பாக ஆரம்ப கட்டத்தில் நீதிமன்ற நியாயாதிக்கமுள்ள மாகாண ரீதியான மேல் நீதிமன்றங்கள் மற்றும் குடியியல் மேன்முறையீட்டு நியாயாதிக்கம் காணப்படுகின்ற குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் நிலவுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையை தாமதமின்றி தீர்ப்பதற்கு மேன்முறையீட்டு நீதிபதிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. அத்துடன், நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பிராந்திய ரீதியாக மேன்முறையீட்டு நீதிமன்றங்களை இயக்குதல் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த நீதிமன்றங்களிலுள்ள அனுபவம் வாய்ந்த மற்றும் கல்வியறிவுடைய நீதிபதிமார்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் தற்போது நிலவுகின்ற நீதிபதிகளின் நியதிச்சட்ட ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி நீதிமன்றங்களின் செயன்முறையை வினைத்திறனாகவும் மற்றும் முறைசார்ந்த வகையிலும் மேற்கொள்வதற்காக அரசியலமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. **பசுமை காலநிலை நிதியத்தின் கிழக்காசியா மற்றும் தெற்காசியவுக்கான பிராந்திய உரையாடலை இலங்கையில் நடாத்துதல்**

பசுமை காலநிலை நிதியம் (Green Climate Fund) என்பது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பச்சை வீட்டு விளைவ வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு மற்றும் காலநிலை மாற்றங்களால் ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்கு இசைவாக்கமடைவதற்காக நிதிப் பங்களிப்புக்களை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான பணிச்சட்டக உடன்படிக்கையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிதியமாகும். காலநிலை மாற்றம் தொடர்பான கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல், சவால்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைப் பரிமாறிக் கொள்ளல், பங்காண்மையைக் கட்டியெழுப்புதல் மற்றும நிதியத்தின் புதிய மூலோபாயங்கள் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் போன்ற பணிகளுக்கு இந்நிதியத்தின் மூலம் பிராந்திய உரையாடல்கள் நடாத்தப்படுகின்றன. கிழக்காசியா மற்றும் தெற்காசியவுக்கான பசுமை காலநிலை தொடர்பான பிராந்திய உரையாடலை இலங்கையில் நடாத்துவதற்கான உபசரிப்புக்களை வழங்குமாறு பசுமை காலநிலை நிதியத்தின் ஆசிய பசுபிக் குழுவினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த பிராந்திய உரையாடலுக்கு 11 நாடுகளின் பிரதிநிதிகள் 120 பேர் கலந்துகொள்ளவுள்ளனர். அதற்கமைய, இப்பிராந்திய உரையாடல் 2026.09.14 தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் நடாத்துவதற்கு உபசரிப்புக்களை மேற்கொள்வதற்கும், அதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசுக்கும் பசுமை

காலநிலை நிதியத்திற்கும் இடையில் கையொப்பமிடவதற்காக சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

தற்போதுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ், கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருட்களை அழிப்பதற்காகவும், மற்றும் கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருட்களை வழக்கு விசாரணைகளை பூர்த்தியடையும் வரைக்கும் காப்பில் வைத்திருக்காமல், அழித்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குழு அறிக்கையின் பிரகாரம் (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2026.03.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஆழ்கடலில் அபாயகர ஔடதங்களை உற்பத்தி செய்தல் அல்லது உடமையில் வைத்திருத்தல் தொடர்பாக 2026 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் 54(1)அ மற்றும் 83(2) ஆம் பிரிவு மற்றும் 03 ஆவது அட்டவணையை திருத்தம் செய்வதற்கு 2026.04.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த திருத்தங்களுக்கு சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. சுற்றுலாத்துறை முதலீட்டுக் கருத்திட்டத்திற்கு ஜனாதிபதி மாளிகைகளை வழங்கல்**

ஜனாதிபதி அவர்களின் உத்தியோகபூர்வப் பணிகள் மற்றும் தனிப்பட்ட ஓய்வுக்காகப் பயன்படுத்தும் நோக்கில் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் ஜனாதிபதி மாளிகைகள் சிலவற்றைப் பேணி வந்தாலும், இம்மாளிகைகள் தற்போதைய ஜனாதிபதி அவர்களின் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. இம்மாளிகைகள் மிகவும் உயர்ந்த கட்டிடக்கலை நுட்பங்கள் மற்றும் பொருளாதாரப் பெறுமதிகளுடன் கூடிய மாளிகைகள் முழுமையான வசதிகளுடனும், கவர்ச்சிகரமான நில அலங்காரங்களையும் கொண்டமைந்தவையாகும். தற்போது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் இம்மாளிகைகளைப் பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் ஏனைய செலவுகளுக்கு அரச நிதி குறிப்பிடத்தக்களவு செலவு செய்ய வேண்டியுள்ளது. அதனால், அரசுக்குச் சொந்தமான சுற்றுலாத் தங்ககங்கள், வீடுகள் மற்றும் ஜனாதிபதி மாளிகைகளை பொருளாதார ரீதியாகப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான முறையை அறிமுகப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளைக் கருத்தில் கொண்டு, பெந்தோட்டை, கதிர்காமம், மஹியங்கனை, எம்பிலிப்பிட்டி மற்றும் அநுராதபுர பிரதேசங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைகளை சுற்றுலாத்துறை முதலீட்டுக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முதலீட்டு முன்மொழிவுகளைப் பெற்று தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**